# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | உயிரியியல் | மதிப்பெண்கள் : 70

உயிரியல் - தாவரவியல் | மதிப்பெண்கள்:- 35

### பகுதி - அ

குறிப்பு:- i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 1×8=8

1) பாக்டீரியங்களில் கிராம் சாயமேற்றும் முறையை முதன்முதலில் உருவாக்கியவர்
அ) டொர்ஜி ஆ) கிருஸ்டியன் கிராம் இ) எர்கன்பெர்க் ஈ) லெடர்பெர்க்

2) அகார்-அகார் எந்த பாசியிலிருந்து பெறப்படுகிறது?
அ) ஆஸ்கோபில்லம் ஆ) கேரா இ) ஃபியூகஸ் ஈ) ஜெலிடியல்லா

3) பலகை வேர்கள் காணப்படும் தாவரம்
அ) பாம்பர்க்ஸ் ஆ) வேம்பு இ) ஆலமரம் ஈ) மாமரம்

4) பறவைகளின் சொர்க்க மலர்
அ) மியூஸா பாரடைசியாகா ஆ) ராவனல்லா மடகாஸ்கரியன்ஸ்
இ) ஹெலிகோனியா சிற்றினம் ஈ) ஸ்டெரிலிட்சியா ரெஜினே

5) யூகேரியாடிக் செல்லானது ________ நேரத்திற்கு ஒரு முறை பகுப்படைகிறது
அ) 11 மணி ஆ) 24 மணி இ) 4 மணி ஈ) 8 மணி

6) மேற்புறப்பரப்பு நார்களுக்கு எடுத்துக்காட்டு
அ) தேங்காய் ஆ) சணல் இ) மியூசா ஈ) பருத்தி

7) 'பெரிடெர்ம்' பாதுகாப்பு அடுக்கில் காணப்படும் உயிரற்ற திசு
அ) ஃபெல்லோஜென் ஆ) ஃபெல்லம் இ) ஃபெல்லோடெர்ம் ஈ) புறணி

8) இந்தியன் பைப் எனப்படுவது
அ) பெலனோஃபோரா ஆ) நியோட்டியா இ) மோனோட்ரோபா ஈ) ஓரபாங்கே

### பகுதி - ஆ

II. குறிப்பு: ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:- 4×2=8

9) விரியான் என்றால் என்ன?

10) பிரையோஃபைட்டுகளின் மூன்று வகுப்புகள் யாவை?

11) இருசொல்பெயரிடல் முறை என்றால் என்ன? எ.கா. தருக?

12) சினாப்சிஸ் என்றால் என்ன?

13) குவாண்டோசோம்கள் என்றால் என்ன?

14) ஒளிக்காலத்துவம் என்றால் என்ன?

### பகுதி - இ

III. குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய விடையளி.
(வினா எண்.19க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்) 3×3=9

15) பூஞ்சைவேரிகளின் முக்கியத்துவத்தை எழுதுக?

16) $G_0$- நிலை பற்றி குறிப்புத் தருக?

17) டிரக்கீடுகள் மற்றும் நார்கள் வேறுபடுத்துக?

18) சுவாச ஈவு - வரையறு?

19) ஒளிசார் நீர் பகுப்பு என்றால் என்ன?

### பகுதி - ஈ

IV. குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 2×5=10

20) பெந்தம் மற்றும் ஹூக்கர் வகைப்பாட்டினை அட்டவணைப்படுத்துக? (அல்லது)
பாரங்கைமா வகைகளை விளக்குக?

21) $C_3$ மற்றும் $C_4$ தாவரங்களுக்கு இடையேயுள்ள வேறுபாட்டை எழுதுக. (அல்லது)
ஆக்சின் வாழ்வியல் விளைவுகளை எழுதுக.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



உயிரியல் - விலங்கியல் மதிப்பெண்கள்:- 35

பகுதி - அ

குறிப்பு:- i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 1×8=8

1) கீழ்கண்டவற்றுள் எவற்றில் கொல்லாஜன் பாதிப்பினால் முகத்தசைகளில் ஏற்படும் குறைபாடுகள் தோன்றுகின்றன.
அ) ரேப்டோமயோசார்கோவா ஆ) ருமட்டாய்டு ஆர்த்ரைடிஸ்
இ) ஸ்டிக்ளர் சின்ட்ரோம் ஈ) ஜோகரன்ஸ் சின்ட்ரோம்

2) தவளையின் சிறுநீரகம்
அ) ஆர்க்கிநெஃப்ராஸ் ஆ) புரோநெப்ராஸ் இ) மீசோநெஃப்ராஸ் ஈ) மெட்டாநெப்ராஸ்

3) நீண்ட ஆழ்ந்த மூச்சுக்குப்பின் சில வினாடிகள் நாம் காற்றை சுவாசிப்பதில்லை இதற்குக் காரணம்
அ) இரத்தத்தில் அதிக $CO_2$ இருப்பதால் ஆ) இரத்தத்தில் அதிக $O_2$ இருப்பதால்
இ) இரத்தத்தில் குறைவான $CO_2$ இருப்பதால் ஈ) இரத்தத்தில் குறைவான $O_2$ இருப்பதால்

4) சிறுநீர் உருவாக்கத்திற்கு குறைந்த அளவு நீர்த்தேவையுடைய உயிரிகள்
அ) யூரியா நீக்கிகள் ஆ) அம்மோனியா நீக்கிகள்
இ) யூரிக் அமில நீக்கிகள் ஈ) இரசாயன நீக்கிகள்

5) முழங்கையின் கூர்மை பகுதி
அ) ஏகுரோமின் நீட்சி ஆ) கிளிராய்டு குழி இ) ஒலிகிராணன் நீட்சி ஈ) இணைவு

6) கீழ்கண்ட பணிகளில் மூளையின் உச்சி கதுப்பு பகுதியில் பணிகளில் இல்லாதது எது
அ) மொழி ஆ) வாசித்தல் இ) உணர்வறிதல் ஈ) கேட்டல்

7) கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் தைராய்டு சுரப்பி குறித்து வாக்கியங்களில் எது தவறானது எனக் கண்டுபிடி
i) இது உருவாக்க நிகழ்வுகளை தடை செய்கிறது
ii) இது நீா மற்றும் மின்பகுதிகளின் பராமரிப்புக்கு உதவுகின்றது
iii) இதன் அதிக சுரப்பு இரத்த அழுத்தத்தினை குறைக்கலாம்
iv) இது எலும்பு உருவாக்க செல்களைத் தூண்டுகிறது
அ) (i) மற்றும் (ii) ஆ) (iii) மற்றும் (iv) இ) (i) மற்றும் (iv) ஈ) (i) மற்றும் (iii)

8) சரியாக பொருத்தப்பட்டுள்ள இணையை தேர்வு செய்
i) முட்டையிடுபவை - பிரம்மா
ii) கறிக்கோழி வகை - லெக்ஹார்ன்
iii) இருவகை - வெள்ளை பிளிமத்ராக்
iv) அலங்கார வகை - சில்க்கி

பகுதி - ஆ

II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4×2=8

9) மோனோடைப்பிக் வேரினம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
10) சிறப்பு வகை இணைப்புத் திசுக்கள் எவை?
11) உட்சுவாச சேமிப்பு கொள்ளளவு வரையறு. இவற்றின் அளவை கூறு.
12) சிறுநீரகப் பணிகளை நெறிப்படுத்தும் மூன்று ஹார்மோன்கள் யாவை?
13) கபால எலும்புகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
14) அட்ரினல் கார்டெக்ஸின் அடுக்குகளையும் அதன் சுரப்புகளையும் எழுதுக.

பகுதி - இ 3×3=9

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வினா எண். 19க்கு கண்டிப்பாக விடையளி.

15) எலும்பு மீன்களின் மூன்று முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.
16) தவளையில் காணும் சுவாச முறைகளைப் பெயரிடுக.
17) சிறுகுடலில் மட்டும் உறிஞ்சுகள் உள்ளன ஏன் இரைப்பையில் இல்லை?
18) மரண விறைப்பு எவ்வாறு ஏற்படுகிறது?
19) வேலைக்காரத் தேனீக்களின் பணியைக் கூறு.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 2×5=10

20) மண்புழுவின் நரம்பு மண்டலத்தை படத்துடன் விவரி? (அல்லது)
மனிதச் சுற்றோட்ட மண்டலத்தை விவரி?

21) நாளமில்லாச் சுரப்பிகளின் குறை மற்றும் மிகைச் செயல்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கோளாறுகள் எவையேனும் ஐந்தை எழுதுக. (அல்லது)
கோழியின் வகைகளை விரிவாக விவரி

*******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com